



<u>நகர் ஊரமைப்பு - இராமநாதபுரம் மாவட்டம்.</u>

இராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை வட்டம் ,திருபுல்லாணி ஊராட்சி ஒன்றியம், தில்லையேந்தல் ஊராட்சி , கீழக்கரை கிராமம், நில அளவை எண்: 178/1D1 & 1E1 -இல் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்

இணையதள பதிவு எண் : **J8VWUPE1 / RAMANATHAPURAM / TCP / 2024**

அளவு திட்டம் : 1:400

வ

<u>குறிப்பு :</u>

| | | |
|---|---|---|
| மனைப்பிரிவின் மொத்தப்பரப்பளவு | = | 9920.00 சமீ (2.45 ஏக்கர்) |
| உத்தேச சாலையின் பரப்பளவு | = | 2621.89 சமீ |
| மீதமுள்ள பரப்பளவு | = | 7298.11 சமீ |
| கோரிய மனைகள் | = | 42 |
| ஒதுக்கிய மனைகள் | = | 39 |

மனைப்பிரிவு இடத்தின் எல்லை

நிலையில் உள்ள சாலை

<u>ஒதுக்கீடுகள்:</u>

மின்சார வாரியத்திற்கு தான பத்திரம் ஆவண எண்:992/2025, நாள்:20.02.2025-ன் மூலம் ஒப்படைப்பு செய்யப்பட்டது.

மின்வாரிய ஒதுக்கீடு - 41.05 சமீ (0.56%)

உள்ளாட்சிக்கு தான பத்திரம் ஆவண எண்:991/2025, நாள்:20.02.2025-ன் மூலம் ஒப்படைப்பு செய்யப்பட்டது.

உள்ளாட்சி ஒதுக்கீடு - 41.05 சமீ (0.56%)

உத்தேச மனைப்பிரிவு சாலை மற்றும் மூலை முடக்கு - 2621.89 சமீ

<u>மூலை முடக்கு:</u>

7.20மீ - 12.00மீ க்கு சாலைகளுக்கு - 1.50மீ x 1.50மீ

(அரசாணை எண்:18, ந.நி.(ம)கு.வ(ந.ப.1) துறை நாள்:04.02.2019, விதி-47(6)-ன் படியும் மற்றும் நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண்:4367/2019-பிஏ2, நாள்:05.20.2020-ன் படியும் பூங்கா பரப்பிற்கு ஈடாக அரசு வழிகாட்டி மதிப்பீட்டின் படி தொகை மனுதாரரால் செலுத்தப்பட்டது.)

<u>நிபந்தனைகள்:</u>

1.அரசாணை நிலை எண் : 71 ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை நாள்:16.08.2003-ன் படி நில உரிமம் குறித்து தனி அலுவலர்/வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ), தில்லையேந்தல் ஊராட்சி உறுதி செய்துகொள்ள வேண்டும்.

2. அரசாணை நிலை எண் : 181 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள்:09.12.2020 மற்றும் 141 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை, நாள்:16.07.2022 -ன் படி தனி அலுவலர்/வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ), தில்லையேந்தல் ஊராட்சி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும். மேலும் சாலைகள் மற்றும் பொது உபயோகம் நிலபரப்பினை தில்லையேந்தல் ஊராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளதனை உள்ளாட்சி பெயருக்கு உட்பிரிவு செய்து அரசாணையின்படி தொடர் நடவடிக்கைகள் மேற்க்கொண்டு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

3. இம்மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கும்முன் நில ஆர்ஜிதம் ஏதும் இல்லை எனவும், எந்தத் துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும், மற்றும் நில ஆர்ஜிதம் செய்து தரக்கோரி மாவட்ட வருவாய் அலுவலரிடமிருந்து உத்தேசங்கள் ஏதும் பெறப்படவில்லை என்றும் தனி அலுவலர்/வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ), தில்லையேந்தல் ஊராட்சி உறுதி செய்து கொள்ள வேண்டும்.

4. நில உரிமம் குறித்து சமர்பிக்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின், மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி ரத்து செய்யப்படும்.

5. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்

6. நகர் ஊரமைப்பு துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிபடுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்பித்த ஆவணங்களான கிரையப்பத்திரம், குத்தகைப்பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று மட்டுமே சரிப்பார்க்கப்படுகிறது. முதற்கட்டமாக விண்ணப்பதாருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்றும் சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும் விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் யாரேனும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்பு துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

**SWP/DTCP/RAMANATHAPURAM/ LAYOUT No :16/2025**

**esigned**

உதவி இயக்குநர் (பொ)
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
இராமநாதபுரம் மாவட்டம்

Signature Not Verified